<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>

<u>அசல் வழக்கு எண். 267/2021</u>

**2023–ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மதிவாணன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : பாலுசாமி | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : புதுப்பேட்டை | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 63/2023 |

**வாதி தரப்பு முதல் விசாரணை**

1) நான் தாவா வழக்கில் வாதி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 10.08.1970 ம் தேதியிட்ட வாதியின் தாயார் காவேரியின் பெயரில் உள்ள செட்டில்மென்ட் அசல் வா.சா.ஆ **1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 19.03.20201 ம் தேதியிட்ட வாதியின் மகன்கள் பெயரில் உள்ள தான செட்டில்மென்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ 2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2) வாதியின் தாயார் பெயரிலும் பிரதிவாதியின் பெயரிலும் கூட்டாக உள்ள மனைவரி பட்டாவின் அசல் **வா.சா.ஆ 3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரிலும் அவரது மூத்த மகன் பெயரிலும் உள்ள வீட்டு வரி ரசீது **வா.சா.ஆ 4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 26.04.2015 ம் தேதியிட்ட வருவாய் துறை குறிப்பாணை **வா.சா.ஆ 5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. 28.07.2015 ம் தேதியிட்ட குன்னம் வட்டாட்சியர் செயல்முறைகள் மற்றும் வாதியின் மேல் முறையீட்டு நகல் மனு **வா.சா.ஆ 6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
3) புகைப்படங்கள் **வா.சா.ஆ 7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக பிரார்த்திக்கப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

Taken court by in open court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif–cum–Judicial Magistrate,
Kunnam.

DOWNLOAD